தினமலர்
நிறுவனர்: டி.வி.ராமசுப்பையர்

இன்றைய வேளாண் செய்திகள்

25.09.2012 A.M

**25th Sep 20012** உயர் தொழில் நுட்ப உற்பத்திபெருக்கு திட்டத்தில் மானியம்

திண்டுக்கல்,:உயர் தொழில் நுட்ப உற்பத்தி பெருக்குத் திட்டத்தின் கீழ், காய்கறிகளை உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு, 50 சதவீதம் மானியம் வழங்கப்படும், என, கலெக்டர் வெங்கடாசலம் தெரிவித்துள்ளார். அவர் கூறியதாவது:இத்திட்டத்தின் கீழ் பயிர் செய்யும் காய்கறிகளுக்கு விதைகள், உரங்கள் வழங்கப்படும். கத்தரிக்காய் உற்பத்தி 35 எக்டேர், வெண்டை 25 எக்டேர், சின்ன வெங்காயம் 200 எக்டேர், கீரை வகைகள் 2 எக்டேர், மலைக்காய்கறி பயிர்கள் 25 எக்டேர், மிளகாய் 100 எக்டேர், இதர காய்கறிகள் பயிர்கள் 20 எக்டேர், என, மொத்தம் 407 எக்டேர் பரப்புக்கு குறியீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதற்கு ரூ. 46.73 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.அவரை, புடலை, பீர்க்கு, பாகல் ஆகியவை பயிர் செய்யும் விவசாயிகள், கல் ஊன்றி பந்தல் அமைக்க, கம்பி வளை கட்டும் செலவில் 50 சதவீதம் மானியமும், உற்பத்தி செய்யும் அவரை, புடலை, பீர்க்கு, பாகல் ஆகிய விதைகளுக்கு 50 சதவீதம் மானியமும் வழங்கப்படும். பந்தல் காய்கறி சாகுபடி செய்ய பொருள் குறியீடாக 110 எக்டேரும், நிதி குறியீடாக ரூ.171.16 லட்சமும் அரசு அனுமதி அளித்துள்ளது. இத்திட்டத்தில் பயன் பெற சிட்டா, அடங்கல், ரேஷன்கார்டு நகல், 2 புகைபடத்துடன், வட்டார தோட்டக்கலை உதவி இயக்குனரை அணுகலாம், என்றார்.

**25th Sep 20012** மாட்டுப்பண்ணையில் ஹைடெக் பிரிவு துவக்கம்

மூணாறு,:மாட்டுப்பட்டி இன்டோ-சுவீஸ் மாட்டுப் பண்ணையில்,8.50 கோடி ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ள "ஹைடெக்' பிரிவை, கேரள முதல்வர் உம்மன்சாண்டி இன்று தொடங்கி வைக்கிறார். மூணாறு அருகே மாட்டுப்பட்டியில், கால் நடை துறை சார்பில் செயல்பட்டு வரும் இன்டோ-சுவீஸ் மாட்டு பண்ணையில், தரம் வாய்ந்த பல்வேறு இன காளைகளில் இருந்து

உயிரணுக்கள் சேமித்து, நாடு முழுவதும் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.இங்கு கலப்பு இன காளைகளை உற்பத்தி செய்யும் நோக்கில், 8.50 கோடி ரூபாய் செலவில் முற்றிலும் இயந்திரமயமாக்கப்பட்ட "ஹை டெக்' பிரிவு அமைக்கப்பட்டுள்ளது. இதன் தொடக்க விழா இன்று நடக்கிறது.கேரள முதல்வர் உம்மன்சாண்டி இன்று தொடங்கி வைக்கிறார். விவசாயம் மற்றும் கால்நடை பாதுகாப்புத்துறை அமைச்சர் மோகனன்,பால் வளம் மற்றும் கிராம வளர்ச்சி துறை அமைச்சர் கே.சி.ஜோசப், நீர் வளத்துறை அமைச்சர் பி.ஜே.ஜோசப் உட்பட பலர் பங்கேற்கின்றனர்.

25th Sep 20012

## இயற்கை விவசாயமே நம்மையும், சந்ததியினரையும் வாழ வைக்கும்

திருநெல்வேலி: ""இயற்கை விவசாயம் மட்டுமே நம்மையும், நம் சந்ததியினரையும் வாழ வைக்கும்" என நெல்லையில் நடந்த உணவுத் திருவிழாவில் இயற்கை வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வார் தெரிவித்தார்.

நெல்லை தினமலர், நன்னெறித் தொடர்பகம், ஸ்ரீராம் குரூப்ஸ், ஜானகிராம் ஓட்டல், ராஜா போட்டோ ஸ்டூடியோ, சிகரம் நல்லெண்ணெய் ஆகியன இணைந்து நெல்லை டவுனில் இயற்கை உணவுத் திருவிழாவை நடத்தியது. விழாவை பார்வதி சேஷ மகால் உரிமையாளர் சங்கர் திருவிளக்கு ஏற்றி துவக்கி வைத்தார். நிகழ்ச்சியில் இயற்கை ஆர்வலர்கள் தச்சை கணேஷ்ராஜா, வைகை குமாரசாமி, கோமதிநாயகம், மாறன் கருத்துரை வழங்கினர்.

விழாவில் இயற்கை வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வார் பேசியதாவது;பசு மாட்டை தாயாகவும், தெய்வமாகவும் பார்கிறோம். பசுவின் மூலம் பெறப்படும் பஞ்ச கவ்யம் உடலில் ஏற்படும் நோயை நீக்குகிறது. வெளிநாட்டினர் பசு மாட்டை பால் வழங்கும் இயந்திரமாக பார்க்கின்றனர். இயற்கை ஒரு போதும் தவறு செய்வதில்லை. உடலும் தனது கடமையை செய்ய தவறியதில்லை. மனிதன் எந்த உணவு உண்டாலும் 3 மணி நேரம் உடலில் தங்குகிறது. அதற்கு ஏற்ப இடைவேளை விட்டு சாப்பிடுவது நல்லது. ஒருவேளையாவது அடுப்பு பற்ற வைக்காமல் உணவு தயாரித்து சாப்பிட வேண்டும். பின் படிப்படியாக அடுப்பின் பயன்பாட்டை குறைக்க வேண்டும்.

பெரும்பாலனவர்களுக்கு சாப்பாட்டை எப்படி சாப்பிடுவது என்பது கூட தெரிவதில்லை. விலங்குகள், கால்நடைகள் போன்வற்றிருக்கு எப்படி சாப்பிடுவது என்பது தெரியும் என்பதால், அதற்கு முறையாக கழிவுகள் வெளியேறுகின்றன.

நம் நாட்டில் உணவை உற்பத்தி செய்யக்கூடிய விவசாயிகள் தற்கொலை செய்து கொள்கின்றனர். ஆட்சியாளர்கள் பசுமை புரட்சியால் உணவு உற்பத்தி அதிகரிப்பு என கூறுகின்றனர். அப்படி என்றால் விவசாயியின் தற்கொலைக்கு என்ன காரணம் என்பதை ஆட்சியாளர்கள் அறிய வேண்டும்.

புற்றுநோய்க்கு நவீன ஆஸ்பத்திரிகள் பணம் பறிப்பில் ஈடுபட்டு வருகின்றன. இந்நோய்க்கு

இயற்கை முறையில் மருத்துவ சிகிச்சை உள்ளன. நம் நாட்டில் காபி, டீ, புகையிலை போன்வற்றின் பயன்பாட்டால் 75 சதவீதமான நோய்கள் வருகின்றன. டீ , காபி குடிப்பதால் பசியை ஆற்றாமல், பசியை தெரியாமல் செய்கிறது. சிலர் டீ, காபி குடித்தால் பணியை களைப்பின்றி செய்வதாக கருதுகின்றனர். மேற்கண்டவற்றை குடிப்பதால் ரத்தம் கட்டியாகிறது. அதற்கு பதிலாக களைப்பு இன்றி பணி செய்ய குளிர்ந்த நீரை குடிப்பதோடு, தண்ணீரில் முகத்தை சுத்தம் செய்தால் புத்துணர்வுடன் களைப்பின்றி தொடர்ந்து பணி செய்ய முடியும்.

பால் சாப்பிடுபவர்களுக்கும் நோய் வரவாய்ப்புள்ளது. பாலிற்கு பதிலாக மோரை சாப்பிட்டால் உடல் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும். இயற்கை விவசாயம் செய்பவர்கள் மட்டுமே நுகர்வோர் நலனில் அக்கறை காட்டுகின்றனர். இத்தகைய நபர்களை நுகர்வோர்கள் அடையாளம் காண வேண்டும். இயற்கை விவசாயம் மட்டுமே நம்மையும், நம் சந்ததியினரையும் வாழ வைக்கும். இதற்கு நிறைய இயற்கை பயிற்சி மையங்கள் உருவாக்கப்படுவதோடு, இயற்கை விவசாயம் செய்பவர்களின் எண்ணிக்கையும் அதிகரிக்க வேண்டும்.

இவ்வாறு இயற்கை வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வார் தெரிவித்தார்.

விழாவில் ஓட்டல் ஜானகிராம் ராம்குமார், முக்கய பிரமுகர்கள், இயற்கை தன்னார்வலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

உணவுத் திருவிழாவில் இயற்கை விவசாயம் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை கொண்டு சமைக்காமல் தயாரிக்கப்பட்ட நவதானிய உருண்டை, முளைகட்டிய தானியம், கருவேப்பிலை ஜூஸ், கார அவல், முளைகட்டிய வெந்தயம், பீட்ரூட் ஊறுகாய், சுவையூட்டப்பட்ட வெண்டைக்காய், தக்காளி, அவல்பாயாசம் உட்பட பல்வேறு இயற்கை உணவுகள் இடம் பெற்றிருந்தன. நிகழ்ச்சியில் பங்கேற்ற அனைவரும் இயற்கை உணவை ருசிபார்த்தனர்.

மாலையில் பல்வேறு கலை நிகழ்ச்சிகள், மெல்லிசை நிகழ்ச்சி நடந்தன. உணவுத்திருவிழாவில் இயற்கை விவசாயம், இயற்கை உணவு, இயற்கை மருத்துவம் தொடர்பான புத்தகங்கள், இயற்கை உணவு பொருட்கள் போன்றவற்றின் ஸ்டால்கள் இடம் பெற்றிருந்தன.

## 25th Sep 20012 | வள்ளியூர், நான்குநேரியில் விவசாயிகள் ஆலோசனை கூட்டம்

வள்ளியூர் : வள்ளியூர் மற்றும் நான்குநேரியில் அட்மா விவசாயிகள் ஆலோசனை கூட்டம் நடந்தது.வள்ளியூர் வட்டார அட்மா விவசாயிகள் ஆலோசனை கூட்டம் வள்ளியூர் யூனியன் அலுவலக கூட்ட அரங்கில் நடந்தது. கூட்டத்திற்கு வேளாண்மை உதவி இயக்குநர் மேரி அமிர்தாபாய் தலைமை வகித்தார். கூட்டத்தில் வள்ளியூர் வட்டார விவசாய ஆலோசனை குழு உறுப்பினர்களான 20 விவசாயிகள் கலந்து கொண்டனர். பணகுடியை சேர்ந்த விவசாயி ஆறுமுகம் ஆலோசனை குழு தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

கூட்டத்தில் அட்மா திட்டத்தின் கீழ் விவசாயிகள் வெளிமாநில கல்வி சுற்றுலாவாக கேரளா மாநிலத்திற்கு ஒருவார காலம் அழைத்து செல்ல தீர்மானிக்கப்பட்டது. கூட்டத்தில் வேளாண் அலுவலர் பாலாஜி, உதவி வேளாண் அலுவலர் குருபாக்கியம், சிவராஜன், வேளாண் வணிக அலுவலர் ஆனந்தன், தோட்டக்கலை உதவி வேளாண்மை அலுவலர் மணிகண்டன், அட்மா தொழில்நுட்ப மேலாளர் பாப்பாத்தி, தொழில்நுட்ப அலுவலர்கள் கோகிலவாணி, பிரதாப்சிங் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

நான்குநேரி வட்டார அட்மா விவசாயிகள் ஆலோசனை குழு கூட்டம் வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தில் நடந்தது. கூட்டத்திற்கு தோட்டக்கலைத்துறை உதவி வேளாண் இயக்குநர் ஆசீர் கனகராஜ் தலைமை வகித்தார். வேளாண் அலுவலர் அலாய்ஸ் ராஜன் விளக்கவுரையாற்றினார். கூட்டத்தில் அட்மா ஆலோசனை குழு தலைவர் சிவகிருஷ்ணராஜா, அட்மா மேலாளர் செல்வராணி, தொழில்நுட்ப வல்லுநர்கள் வானுமாமலை, ஊய்க்காட்டதாஸ் உட்பட விவசாயிகள் கலந்து கொண்டனர்.

## 25th Sep 20012 | நீர்வள, நிலவளம் திட்ட பயிற்சி முகாம்

ஈரோடு: நீர் வள, நிலவளத் திட்டத்தின் கீழ், பாலாறு உபவடி நிலப்பகுதி விவசாயிகள் கூடுதல் வருவாய் பெறவும், நல்ல மகசூல் பெறுவது குறித்த ஆலோசனை மற்றும் பயிற்சி முகாம் நடந்தது. தாராபுரம், காங்கேயம் தாலுக்காவில், பாலாறு உபவடி நிலப்பகுதியில் உள்ள விவசாயிகளுக்கு, பாசன முறைகள், விவசாய தொழில்நுட்பங்கள் குறித்த பயிற்சி அளிக்கப்பட்டது.
மாறிவரும் வர்த்தக சூழலுக்கேற்ப, விவசாயிகள் நல்ல தரமான பொருட்களை உற்பத்தி செய்வது அவசியம். தவிர, கூடுதல் வருவாய் பெறவும், நல்ல மகசூல் பெறவும், வேளாண் துறை வழிவகை செய்துள்ளது. அதற்கேற்ப, நவீன வேளாண் வணிகத்தில் விவசாயிகள் பயன்பெறும் வகையில், உலக வங்கி நிதி உதவியுடன், பாலாறு உபவடி நிலப்பகுதி விவசாயிகள், அறுவடைக்கு பின் செய்ய வேண்டிய தொழில்நுட்பங்கள், விளைபொருள் தரம் பிரிப்பு, தானிய சேமிப்பு, மதிப்பு கூட்டுதல் மற்றும் சந்தைப்படுத்தும் முறை குறித்து ஆலோசனை மற்றும் பயிற்சி அளிக்கப்பட்டது. வேளாண் துறை, தோட்டக்கலைத் துறை, கால்நடைத் துறை, பட்டு வளர்ச்சி துறை, நபார்டு வங்கி, கூட்டுறவுத் துறை, வேளாண் பல்கலைக்கழக அலுவலர்கள் பயிற்சி அளித்தனர்.

## 25th Sep 20012 தட்டுப்பாடு இல்லாமல் உரம் விவசாயிகள் கூட்டத்தில் உறுதி

ஊட்டி : "விவசாயிகளுக்கு என்.சி.எம்.எஸ்., மூலம் தட்டுப்பாடு இல்லாமல் உரம் வினியோகம் செய்யப்படும்,' என அறிவிக்கப்பட்டுள்ளது.
நீலகிரி மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் நடந்தது.மாவட்ட வருவாய் அலுவலர் நிர்மல்ராஜ் தலைமை வகித்தார்.
விவசாய சங்கங்கள், தோட்டக்கலை துணை இயக்குனர் மற்றும் இதர துறை சார்ந்த அரசுஅலுவலர்கள் பங்கேற்றனர்.
விவசாய சங்கங்களிடம் இருந்து கோரிக்கைகள் பெறப்பட்டு உரிய துறை அலுவலர்களுக்கு அனுப்பப்பட்டு விபரம் பெற்று குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் 25 கோரிக்கைகள் குறித்து விவாதிக்கப்பட்டு விபரங்கள் அளிக்கப்பட்டன.
ஆவின் பால் பூத்கள் டெண்டர் விடுவது; வனவிலங்குகளால் பயிர்களுக்கு சேதங்கள் ஏற்படுவதற்கு நிவாரணம் பெறுவது; தோட்டக்கலை துறையின் மூலம் காய்கறி பயிர்களுக்கு மானியத்தில் நீர்தெளிப்பான் கருவி வழங்குவது குறித்து விவாதிக்கப்பட்டது.
வனவிலங்குகளால் பொதுமக்களுக்கும் விவசாயத்திற்கும் சேதாரம் ஏற்படும் போது உரிய நஷ்டஈடு வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டது. "விவசாயிகளுக்கு என்.சி.எம்.எஸ்., மூலம் தட்டுப்பாடு இல்லாமல் உரம் வினியோகம் செய்யப்படும்,' என அறிவிக்கப்பட்டது.

## 25th Sep 20012 விதைப் பண்ணை விவசாயிகளுக்கு பயிற்சி

கள்ளக்குறிச்சி : கள்ளக்குறிச்சி அடுத்த வீரசோழபுரம் கிராமத்தில் தனியார் விதைப் பண்ணை விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. அரசின் ஆத்மா திட்டத்தின்கீழ் நடந்த பயிற்சி முகாமிற்கு ஊராட்சி தலைவர் செல்வராஜ் தலைமை தாங்கினார். முன்னாள் ஊராட்சி தலைவர் செங்கோட்டுவன் முன்னிலை வகித்தார். மாவட்ட விதைப்பண்ணை உதவி இயக்குனர் வேலாயுதம் கலந்து கொண்டு, தரமான விதைகளை உற்பத்தி செய்யும் முறைகளை பற்றி விளக்கினார். கள்ளக்குறிச்சி விதைச்சான்று அலுவலர் அன்பழகன் விதை உற்பத்தியின்போது ஏற்படும் இடர்பாடுகளை களைவது குறித்தும், விதைகளை வாங்கும்போது கவனிக்க வேண்டியவை மற்றும் விதை சட்ட அமலாக்கம் பற்றி விதை ஆய்வா ளர் சீனிவாசன் பேசினர். முகாமில் தனியார் விதை உற்பத்தி நிறுவன பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

## 25th Sep 20012 | கம்பு விலை உயர்வால் விவசாயிகள் மகிழ்ச்சி

தியாகதுருகம் : தியாகதுருகம் மார்கெட் கமிட்டியில் கம்பு மூட்டை அதிக விலைக்கு விற்பனையானதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

தியாகதுருகம், ரிஷிவந்தியம் பகுதியில் 3,000 ஏக்கர் பரப்பில் மானாவாரி நிலங்களில் கம்பு சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இவ்வாண்டு மழை குறைந்ததால் கம்பு சாகுபடி பரப்பும் வெகுவாக குறைந்துவிட்டது.

இருப்பினும் அவ்வப்போது பெய்த மழை ஈரத்தால் பயிர்கள் செழித்து வளர்ந்துள்ளது.

சாகுபடி செய்துள்ள ஒட்டுரக கம்பு பயிர்களில் கதிர்கள் நன்கு பருத்து நீளமாக வளர்ந்துள்ளதால் நல்ல மகசூல் கிடைக்கும் என்று விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

தற்போது கம்பு

அறுவடை துவங்கியுள்ளது. சாகுபடி பரப்பு குறைந்ததால் இந்த ஆண்டு கூடுதல் விலை கிடைக்கும் என விவசாயிகள் எதிர்பாத்தனர். அதன்படியே விலை அதிகரித்துள்ளது.

கடந்த ஆண்டு 100 கிலோ எடை கொண்ட கம்பு மூட்டை தியாகதுருகம் மார்கெட் கமிட்டியில் 1,100 ரூபாய் விலை போனது. நேற்று 1,551 ரூபாய்க்கு விற்பனை

யானது.

இதனால் கம்பு மூட்டைகள் கொண்டு வந்த விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர்.

## 25th Sep 20012 | துவரை சாகுபடி விவசாயிக்கு நாற்றங்கால் செயல் விளக்கம்

ராசிபுரம்: "துவரை சாகுபடி நாற்றங்கால் பயிரிடும் விவசாயிகளுக்கு, வெண்ணந்தூர் வேளாண் விரிவாக்கம் மையம் சார்பில், செயல் விளக்கம் அளிக்கப்படுகிறது' என, வேளாண் உதவி இயக்குனர் சுப்ரமணியம் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:ராசிபுரம் அடுத்த வெண்ணந்தூர் வட்டாரப்பகுதிகளில், தற்போது, மழையின்றி மிகவும் வறட்சியான சூழ்நிலை காணப்படுகிறது. இப்பகுதியை சேர்ந்த விவசாயிகள், தற்போது பெய்துவரும் குறைவான மழைநீரை பயன்படுத்தி, துவரையை சாகுபடி செய்யலாம்.அவ்வாறு சாகுபடி செய்யும் நாற்றங்காலுக்கு, ஆறுக்கு நான்கு என்ற அளவில் உள்ள பாலிதீன் பைகளில், செம்மண், மக்கிய தொழு உரம், மண்புழு உரம், மக்கிய தேங்காய் நார்க்கழிவு மற்றும் மணல் ஆகியவற்றை நன்கு கலந்து, 1:1:1 என்ற அளவில் பைகளில் இட்டு நிரப்ப வேண்டும்.நான்குக்கு மூன்று என்ற அளவில், தரமான சான்று விதைகள், சி.ஓ., (ஆர்.இ.,) 7 கரு விதைகள் ஒரு பாக்கெட் என்ற கணக்கில், 11 கிலோவுக்கு ஒரு ஏக்கர் அளவில் தயார் செய்ய வேண்டும். அதை பயிரிட்டு, 35 நாட்களில், ஆறுக்கு மூன்று இடைவெளியில் நடவு செய்ய வேண்டும்.நடவு நட்ட பின், 30வது நாள், நுனி கிள்ளுதல் பணியை மேற்கொள்ள வேண்டும்.

அவ்வாறு நாற்றங்கால் முறையாக பயன்படுத்தினால், ஏக்கருக்கு, 1,000 கிலோ மகசூல் பெறலாம். மேலும் விபரங்களுக்கு, அருகில் உள்ள வேளாண்மை விரிவாக்க மையத்தை தொடர்பு கொள்ளலாம்.இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

| 25th Sep 20012 | ஒரே நாளில் 10 காசுகள் சரிவு தமிழகம், கேரளாவில் முட்டை விலை 355 காசுகளாக நிர்ணயம் |
|---|---|

நாமக்கல்: தமிழகம், கேரளாவில், முட்டை விலை, 355 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. முட்டை விலை, நேற்று ஒரே நாளில், பத்து காசுகள் சரிந்தது, கோழிப்பண்ணையாளர் மத்தியில் கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.
நாமக்கல்லில், தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் நடந்தது. முட்டை உற்பத்தி, மார்க்கெட் நிலவரம் குறித்து, பண்ணையாளர்கள் விவாதித்தனர். அதையடுத்து, 365 காசுகளுக்கு விற்பனை செய்யப்பட்ட முட்டை, பத்து காசுகள் குறைத்து, 355 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.சில வாரங்களாக, முட்டை விலை தொடர் ஏற்றம் கண்டு வந்தது. இச்சூழலில், நேற்று ஒரே நாளில், முட்டை விலையில், பத்து காசுகள் சரிவு ஏற்பட்டது, கோழிப்பண்ணையாளர் மத்தியில், பெரும் கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.
நாட்டின் பிற மண்டலங்களில் முட்டை விலை நிலவரம்:சென்னை, 372 காசுகள், பெங்களூரு, 365 காசுகள், மைசூரு, 365 காசுகள், ஹைதராபாத், 338 காசுகள், மும்பை, 370 காசுகள், விஜயவாடா, 340 காசுகள், கோல்கத்தா, 390 காசுகள், பார்வாலா, 318 காசுகள், டில்லி, 345 காசுகள். இவ்வாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.நாமக்கல்லில், நேற்று நடந்த பண்ணையாளர், வியாபாரிகள் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், முட்டைக் கோழி விலை கிலோ, 50 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பல்லடத்தில் நடந்த கறிக்கோழி உற்பத்தியாளர் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், அதன் விலை கிலோ, 63 ரூபாயாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

| 25th Sep 20012 | **கரீப் பருவ தானிய உற்பத்தி12 கோடி டன்னாக குறையும்:வேளாண் அமைச்சர் சரத்பவார் தகவல்** |
|---|---|



புதுடில்லி:நடப்பாண்டு கரீப் பருவத்தில் (ஜூலை - அக்டோபர்), நாட்டின் உணவு தானிய உற்பத்தி, 11.72 கோடி டன்னாக சரிவடையும் என, மத்திய வேளாண் அமைச்சர் சரத்பவார் தெரிவித்தார். கடந்த ஆண்டு, இதே பருவத்தில், தானிய உற்பத்தி, 12.99 கோடி டன்னாக இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

எண்ணெய் வித்துக்கள்:இதுகுறித்து அவர் மேலும் கூறியதாவது:உள்நாட்டில், நெல், எண்ணெய் வித்துக்கள், பருப்பு வகைகள் உற்பத்தியாகும், பல மாநிலங்களில், பருவம் தவறிய மழைப்பொழிவாலும், குறைந்த அளவு மழை பெய்ததாலும் தானிய உற்பத்தி, 11.72 கோடி டன்னாக குறையும்.இதில், நெல் உற்பத்தி, கடந்த ஆண்டு, கரீப் பருவத்தை விட, நடப்பு பருவத்தில், 6.5 சதவீதம் குறைந்து, 9.15 கோடி டன்னிலிருந்து, 8.56 கோடி டன்னாக சரிவடையும். சென்ற ஜூலை மாதத்தில், ஒரு சில மாநிலங்களில், மழைப் பொழிவு மிகவும் குறைந்திருந்தது. ஆனால், ஆகஸ்ட் மாதத்தின் பிற்பகுதியில், மழை அளவு அதிகரித்ததை அடுத்து, விவசாயிகள், சாகுபடி பரப்பளவை அதிகரித்துள்ளனர்.

இதனால், ஒட்டுமொத்த அளவில், தானிய உற்பத்தி மேம்படும் என, எதிர்பார்க்கப்படுகிறது. நடப்பு கரீப் பருவத்தில், பருப்பு வகைகள் உற்பத்தி, 52.60 லட்சம் டன்னாக குறையும் என, மதிப்பிடப்பட்டுள்ளது.

இது, கடந்த ஆண்டு, இதே பருவத்தில், 61.60 லட்சம் டன்னாக இருந்தது. இருப்பினும், துவரை உற்பத்தி, 26.50 லட்சம் டன்னிலிருந்து, 27.80 லட்சம் டன்னாக உயரும் என, எதிர்பார்க்கப்படுகிறது.அதேசமயம், உளுந்து உற்பத்தி, 12.80 லட்சம் டன்னிலிருந்து, 11.40 லட்சம் டன்னாகவும், மக்காச்சோளம் உற்பத்தி, 1.62 கோடி டன்னிலிருந்து, 1.49 கோடி டன்னாகவும் குறையும் என, மதிப்பிடப்பட்டுள்ளது.ஒட்டுமொத்த அளவில், எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி, 1.88 கோடி டன்னாக இருக்கும் என, மதிப்பிடப்பட்டுள்ளது. இதில், சோயா வித்துக்கள் உற்பத்தி, 1.26 கோடி டன்னாக உயர வாய்ப்புள்ளது.

அதேசமயம், நிலக்கடலை உற்பத்தி, 38 லட்சம் டன்னாக சரிவடையும். இது, கடந்த ஆண்டு, இதே பருவத்தில், 50.90 லட்சம் டன்னாக இருந்தது.இதே கரீப் பருவத்தில், ஆமணக்கு உற்பத்தி, 23 லட்சம் டன்னிலிருந்து, 14 லட்சம் டன்னாக குறையும்.நடப்பு கரீப் பருவத்தில், பருத்தி உற்பத்தி, 334 லட்சம் பொதிகளாக (ஒரு பொதி=170 கிலோ) குறையும். கடந்த ஆண்டு, இதே பருவத்தில், இதன் உற்பத்தி, 352 லட்சம் பொதிகளாக இருந்தன.கரும்பு:கரும்பு உற்பத்தி, 35.77 கோடி டன்னிலிருந்து, 33.53 கோடி டன்னாக குறையும்.நடப்பு கரீப் பருவத்தில், தானிய உற்பத்தி குறையும் என்றாலும், ரபி பருவத்தில் (அக்., - மார்ச்), நாட்டின் தானிய உற்பத்தி அதிகரிக்கும் என, மதிப்பிடப்பட்டுள்ளது. எனவே, நடப்பு முழு பருவத்தில் (ஜூலை - ஜூன்), நாட்டின் உணவு தானிய உற்பத்தியில், முன் னேற்றம் ஏற்படும். இவ்வாறு அமைச்Œர் தெரிவித்தார்.

இன்றைய வேளாண் செய்திகள்

24.09.2012 P.M

25.09.2012 A.M

25th Sep 20012

## அன்னிய நேரடி முதலீடு விவசாயிகளுக்கு நல்லதே: சரத் பவார்



புது தில்லி, செப். 24: சில்லறை வணிகத்தில் அன்னிய நேரடி முதலீடு வருவது விவசாயிகளுக்கு நல்லதுதான் என மத்திய வேளாண் துறை அமைச்சர் சரத் பவார் புது தில்லியில் திங்கள்கிழமை கூறியிருக்கிறார்.

வேளாண் துறை கருத்தரங்கில் கலந்துகொண்ட அவர் கூறியது: நம் நாட்டில் அறுவடைக்குப் பிறகு ஏற்படும் நஷ்டம் மிக அதிகம். விளையும் இடத்திலிருந்து விற்பனைக்கு வருவதற்குள் அனைத்து கட்டங்களிலும் நஷ்டம் சம்பவிக்கிறது. குளிர்பதன அமைப்புகளில் அதிக அளவில் முதலீடுகள் தேவைப்படுகிறது. அன்னிய நேரடி முதலீடு அனுமதிக்கப்பட்டிருப்பதால் குளிர்பதன வசதிகள் அமைக்க முதலீடுகள் வரத் தொடங்கும். இதனால் விவசாயிகளும் வாடிக்கையாளர்களும் பயனடைவார்கள்.

சில்லறை வணிகத்தில் அன்னிய நேரடி முதலீடு என்கிற கொள்கையைச் செயல்படுத்துவதில் ஆரம்பத்தில் சிக்கல்கள் எழலாம். ஆனால் இதன் மூலம் விவசாயிகளும் வாடிக்கையாளர்களும் அடையும் பலன்களைக் கண்ட பின்பு, இந்தக் கொள்கையை எதிர்க்கும் மாநிலங்களும் இதனை வரவேற்கத் தொடங்குவார்கள்.

ஆயினும், சில்லறை வர்த்தகத்தில் அன்னிய நேரடி முதலீட்டுக் கொள்கையை அமல்படுத்தும் முடிவு அந்தந்த மாநிலத்துக்கே விடப்பட்டுள்ளது. வெளிநாட்டு சில்லறை வர்த்தக நிறுவனங்களின் பெரிய கடைகள் தொடங்குவது பற்றி அந்தந்த மாநிலங்களே இறுதி முடிவெடுக்கலாம் என்றார்.

பெரிய கடைகள் திறக்கப்பட்டால் சிறிய வர்த்தக நிறுவனங்கள் மூடப்படும் நிலை ஏற்படும் என்று கூறப்படுவதை அவர் மறுத்தார். ""பல நாடுகளில் பெரும் வணிக மையங்களுக்கு அருகே சிறிய சில்லறை வர்த்தகம் தொடர்ந்து நடைபெற்று வருவதை நான் பார்த்திருக்கிறேன். நியூயார்க்கில் பெரிய டிபார்ட்மெண்ட் ஸ்டோர்ஸ் அருகிலேயே சிறிய சில்லறை வணிகக் கடைகளும் உள்ளன என அவர் தெரிவித்தார்.

## 25th Sep 20012 | வேளாண் வருவாய் பெருக ...

இந்தியாவின் முதுகெலும்பு வேளாண்மை. மூன்றில் இரண்டு பங்கு மக்களின் வாழ்வாதாரமாகவும், தொழில்துறைக்கான மூலப் பொருள்களை வழங்கும் துறையாகவும், மொத்த விவசாயிகளில் 75 சதவிகிதத்திற்கு மேல் சிறு மற்றும் குறு விவசாயிகளைக் கொண்டுள்ள தொழிலாகவும் வேளாண்மை விளங்குகிறது.

இதுபோன்ற இந்திய வேளாண்மை பற்றிய கருத்துகளைப் பல ஆண்டுகளாக அனைவரும் அறிவோம்.

ஆனால், வேளாண்மையின் நிலை இப்போது தலைகீழாக மாறிச் சென்று கொண்டுள்ளது. இந்நிலை எங்கு சென்று நிற்கும் என்பதைப் பற்றி அறுதியிட்டுக் கூறும் நிலையில் விஞ்ஞானிகளும் இல்லை.

÷சுருங்கக்கூறின், இப்போதைய விவசாயம், ஒவ்வொரு விவசாயியின் தன்னிறைவுத் தேவைக்காக செய்யப்படும் "லாபமற்ற தொழிலாகவே' உள்ளது. ஒவ்வொரு விவசாயியும், தன்னுடைய மற்றும் குடும்பத்தாரின் உடல் உழைப்பை முழுமையாகத் தியாகம் செய்தே வேளாண் உற்பத்தியைச் செய்து வருகின்றனர்.

ஏனெனில், முதலாளித்துவ வேளாண்மையில், இப்போதைய நிலையில், உடல் உழைப்பைக் கணக்கிட்டால் அது வெறும் பூஜ்ய ஊதியத் துக்கே சமமானதாக உள்ளது.

இதன் அடிப்படையிலேயே நம் முன்னோர் "உழுதவன் கணக்குப் பார்த்தால் உழவுக்கோதும் மிஞ்சாது' என்ற பழமொழியைக் கூறியுள்ளனர்.

ஆனால், "உழுதவன் கணக்காய்ப் பார்த்தால் ஊருக்கே மிஞ்சிடாதோ' என்ற புதுமொழிக்கேற்ப நடைபெற வேண்டிய விவசாயம் இன்னும் தொலைவில் உள்ளது.

÷1960-களில் "பசுமைப் புரட்சி'யின் மூலம் வேளாண்மையில் ஏற்பட்ட வளர்ச்சி இப்போது பொலிவிழந்து, கடந்த 10-15 ஆண்டுகளாக "கடமை' விவசாயம் செய்யும் நிலைக்கு பெருவாரியான விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர்.

எதற்காக விவசாயம் செய்கிறோம் என்ற அடிப்படையைக் கூட புரிந்து கொள்ள இயலாத நிலையில் விவசாயம் நடைபெற்று வருகிறது.

இதனால் வேளாண்மையில் லாபம் ஈட்டுவதற்குப் பதிலாக நஷ்டத்தையே சந்திக்கும் சூழ்நிலையில் சிறு மற்றும் குறு விவசாயிகள் உள்ளனர்.

நடுத்தர மற்றும் பெரு விவசாயிகள் தங்களது சொற்ப பண பலத்தால் எதிர்நீச்சல் போட்டு விவசாயம் செய்கின்றனர். இப்படிப்பட்ட நிலையில் பெரும் மாறுதல்கள் ஏற்படும் காலம் தொலைவில் இல்லை.

÷வேளாண்மையை "இயற்கையின் சூதாட்டம்' என்பர். ஏனெனில் பருவமழை பொய்த்தாலோ அல்லது பேரளவு மழைபெய்து வெள்ளச் சேதம் ஏற்பட்டாலோ அல்லது சூறாவளியால் பயிர் பாதிக்கப்பட்டாலோ விவசாயத்தில் மிஞ்சுவது நஷ்டமே.

÷இப்போது இந்திய மக்களில் வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழ்பவர்களில் ஏறத்தாழ 90 சதவிகிதம் பேர் வேளாண்மையைச் சார்ந்தவர்களே.

÷இந்தியாவின் உணவு உற்பத்தி 1994-95-ல் 167.2 மில்லியன் டன்னிலிருந்து 2007-08-ல் 230.8 மில்லியன் டன்னாக அதிகரித்தது.

ஆனால், இதே காலத்தில் தமிழகத்தின் உணவு உற்பத்தி முறையே 18.8 மில்லியன் டன்னிலிருந்து 16.3 மில்லியன் டன்னாகக் குறைந்துள்ளது.

÷இந்தியாவின் நிகர சாகுபடிப் பரப்பு 2000-01-ல் 141.4 மில்லியன் ஹெக்டேரிலிருந்து 140.9 மில்லியன் ஹெக்டேராகக் குறைந்துள்ளது.

இதே காலத்தில் தமிழகத்தின் சாகுபடிப் பரப்பு 5.3 மில்லியன் ஹெக்டேரிலிருந்து 5.1 மில்லியன் ஹெக்டேராகக் குறைந்துள்ளது.

÷ஒட்டுமொத்தமாகப் பார்த்தால், நாடு முழுவதும் வேளாண் விளைநிலம் மிக வேகமாகக் குறைந்து வருவது குறிப்பிடத்தக்கது.

இதற்கான முக்கிய காரணங்களில் ஒன்று "ரியல் எஸ்டேட்' எனப்படும் வீட்டு மனைகள், வேளாண் நிலங்களில் பெருவாரியாக நாடு முழுவதும் உருவாக்கப்பட்டு வருவதே ஆகும்.

÷பசுமைப் புரட்சியின் வெற்றிக்கு வழிவகுத்த வேளாண் விஞ்ஞானி எம்.எஸ். சுவாமிநாதன் கூறும் முக்கிய கருத்துப்படி இந்திய விவசாயிகள் தங்களது வேளாண் விளைபொருள்களை உடனடியாகச் சந்தைப்படுத்தாமல் அந்த விளைபொருள்களின் தரத்தை மேம்படுத்தும் உத்திகளை மேற்கொண்டு அதன் பின்பு விளைபொருள்களை சந்தைப்படுத்தினால் வருவாய் கணிசமாகப் பெருக வாய்ப்பு உள்ளது.

÷உதாரணமாக, நெல் அறுவடை முடிந்த உடனே அதனை விற்றால் உரிய விலை கிடைப்பதில்லை. ஒரு சில மாதங்கள் அதை இருப்பு வைத்து விற்றால் அதிக விலை கிடைக்கிறது.
அதேபோல, பல்வேறு விவசாயிகள் நெல்லி மரம் பல ஏக்கரில் சாகுபடி செய்து நெல்லிக் காய்களை எப்படி சந்தைப்படுத்துவது எனத் தெரியாமல் - அறியாமல், விளைந்த காய்களை மரத்திலேயே அப்படியே விட்டு விடுகின்றனர்.
ஆனால், நீரிழிவு நோய்க்கான அருமருந்தாக உதவும் "நெல்லிச் சாறு' ஆயுர்வேதக் கடைகளில் ஒரு லிட்டர் ரூ.240-க்கு விற்கப்படுகிறது.
இதை உற்பத்தி செய்வதற்கான அடிப்படையாக உள்ள நெல்லிக்காயின் விலை வெறும் 20 ரூபாய் மட்டுமே.
பல இடங்களில் இந்த "நெல்லிச் சாறு' கிடைக்காத சூழ்நிலை உள்ளது. சுருங்கக் கூறின், விளைந்த வேளாண் பொருள்களை மக்களின் தேவைக்கேற்ப எப்படி சந்தைப்படுத்துவது என்பது பெருவாரியான விவசாயிகளுக்குத் தெரியவில்லை. இதனால் அவர்கள் உற்பத்தி செய்த பொருள்களில் நஷ்டம் அடைகின்றனர்.
÷இதுபோன்ற நுட்பமான விஷயங்கள் தவிர விளைபொருள்களின் விலை ஏற்றத்தாழ்வுகள் சாகுபடியாளர்களைக் கடுமையாகப் பாதிக்கிறது.
உதாரணமாக, நாம் அன்றாடம் பயன்படுத்தும் தக்காளி, பீன்ஸ், மிளகாய் போன்ற பல்வேறு காய்கறிகளைக் கூறலாம்.
÷இக்காய்கறிகள் தொடர்ந்து சீராக சந்தைக்குக் கிடைக்கும் வழிவகைகளை விவசாயிகள் கலந்து ஆலோசித்து அதன்படி சாகுபடி முறைகளைக் கையாண்டால் விலை வீழ்ச்சியைத் தடுக்க முடியும். கணிசமாக லாபமும் பெறமுடியும்.
÷பொருளாதாரத்தின் அடிப்படைக் கோட்பாடான சந்தைகளின் தேவை - அளிப்பு இவற்றின் நிலையைப் பொருத்தே இன்றளவும் வேளாண் பொருள்களுக்கு விலை நிர்ணயம் செய்யப்படுகிறது.
எனவே இந்த தேவை - அளிப்பு நிலையை விவசாயிகள் கூர்ந்து கவனித்து உற்பத்தியைத் திட்டமிட்டு அதிகரிக்கவோ அல்லது குறைக்கவோ வேண்டும்.÷ஆனால், இப்போதைய சூழ்நிலையில் விவசாயிகள் அனைவரும் ஒன்றுபட்டு இந்த மேம்பட்ட நிலைக்கு வருவதற்கு கடும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

குறிப்பாக, ஆங்காங்கே திறமையான விவசாய சங்கங்களை ஏற்படுத்தி பெருவாரியான உற்பத்தி விவசாயிகள் அதன் தீவிர அங்கத்தினர்களாகி மேற்கூறப்பட்ட தேவை - அளிப்பு நிலைகளை செயல்படுத்தினால் அதன் மூலம் வருவாய் பெருகி நிச்சயம் அவர்களின் வாழ்வு வளம் பெருகும்.

24th sep 2012 P.M

| 24th Sep 20012 | சம்பா தொகுப்பு சிறப்புத் திட்டம் தொடக்கம் |
|---|---|

பேராவூரணி, செப். 23: பேராவூரணி வேளாண்மை கோட்டத்தில் சம்பா தொகுப்பு சிறப்புத் திட்டம் தொடக்க விழா ஆவணம் கிராமத்தில் அண்மையில் நடைபெற்றது.

விழாவிற்கு தஞ்சை மாவட்ட ஆட்சியர் கா. பாஸ்கரன் தலைமை வகித்தார். ஒன்றியக் குழுத் தலைவர் சாந்தி அசோக்குமார் முன்னிலை வகித்தார்.

துணை வேளாண்மை இயக்குநர் கோ. ராமதாஸ், சம்பா சாகுபடி தொகுப்பு சிறப்புத் திட்டம் குறித்து விளக்கினார்.

ஆட்சியர் பேசுகையில், சம்பா தொகுப்பு சிறப்புத் திட்டம் சார்பாக வேளாண்மை துறை அலுவலர்கள் தெரிவிக்கும் தொழில்நுட்பங்களையும், மானியங்களையும் கேட்டறிந்து விவசாயிகள் வேளாண் உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்றார்.

ஆவணம் கிராமத்தில் நேரடி நெல்விதைப்பு தொழில்நுட்பத்தின் கீழ், கருப்பையன் என்பவரது வயலில் விதை நெல்லை விதைத்து விதைப்புப் பணியை ஆட்சியர் தொடங்கிவைத்தார்.

வேளாண்மை உதவி அலுவலர்கள் நாடிமுத்து, கார்த்திகேயன், ராஜரெத்தினம் மற்றும் வேளாண்மை அலுவலர்கள் கலந்து கொண்டனர். வேளாண்மை உதவி இயக்குநர் எஸ். ஈஸ்வர் வரவேற்றார். வேளாண் அலுவலர் கா. முருகேசன் நன்றி கூறினார்.

| 24th Sep 20012 | முட்டை விலை நிர்ணயத்தில் உற்பத்திச் செலவையும் கணக்கிட திட்டம் |
|---|---|

நாமக்கல், செப்.23: சந்தை நிலவரங்களுக்கேற்ப முட்டை பண்ணைக் கொள்முதல் விலை நிர்ணயிக்கப்பட்டு வந்ததை மாற்றி, இனிமேல் உற்பத்திச் செலவையும் கணக்கிட்டு விலை நிர்ணயம் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

தீவன மூலப்பொருள்களின் விலை உயர்வு காரணமாக முட்டை உற்பத்திச் செலவு பெருமளவில் உயர்ந்துள்ளதை அடுத்து இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு தெரிவித்துள்ளது.

தென்மேற்குப் பருவமழை பொய்த்ததாலும், சோயா மற்றும் மக்காச்சோள ஏற்றுமதி தொடர்வதன் எதிரொலியாக தீவன மூலப்பொருள்களின் விலை கடந்த ஓராண்டில் 40 முதல் 60 சதம் வரை உயர்த்தப்பட்டுள்ளது.

இதையடுத்து, முட்டை ஒன்றின் உற்பத்திச் செலவு தற்போதைய நிலவரப்படி 345 காசுகளாக உயர்ந்துள்ளதுடன், பண்ணைக் கொள்முதல் விலையில் தரகுத் தொகை 25 காசுகள் சென்றுவிடுவதை அடுத்து, பண்ணையாளர்களுக்கு முட்டை ஒன்றுக்கு 5 காசுகள் வரை நஷ்டம் ஏற்படுவதாக நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் பி.செல்வராஜ் தெரிவித்தார்.

| 24th Sep 20012 | இறைச்சி வாங்குவது குறைந்ததால் காய்கறிகள் விற்பனை அதிகரிப்பு |
|---|---|

நாமக்கல், செப்.23: புரட்டாசி மாதம் தொடங்கியதை அடுத்து பொதுமக்கள் இறைச்சி வாங்குவது குறைந்தது. இதையடுத்து, நாமக்கல் உழவர் சந்தையில் ரூ.5 லட்சம் மதிப்பிலான காய்கறிகள் 4 மணி நேரத்தில் விற்றுத் தீர்ந்தன.

தமிழகத்தில் இந்துக்கள் பெரும்பாலும் புரட்டாசி மாதத்தில் அசைவ உணவுகளை தவிர்த்துவிடுவதை அடுத்து இந்த மாதத்தில் ஆடு, கோழி உள்ளிட்ட இறைச்சி விற்பனையும், முட்டை விற்பனையும் சரிவது வழக்கம்.

அதன்படி, நிகழாண்டு புரட்டாசி மாதம் கடந்த திங்கள்கிழமை தொடங்கியது முதலே, நாமக்கல் மாவட்டத்தில் இறைச்சி விற்பனை மந்தமடைந்தது. அதன்தொடர்ச்சியாக ஞாயிற்றுக்கிழமையும் இறைச்சி விற்பனை பெருமளவில் சரிந்து காணப்பட்டது.

வாரந்தோறும் மக்கள் அலைமோதும் நாமக்கல் நகர மட்டன், பிராய்லர் கடைகள், மீன் மார்க்கெட் பகுதிகள் ஞாயிற்றுக்கிழமை வெறிச்சோடின.

இறைச்சி விற்பனை சரிந்த நிலையில் காய்கறிகளின் விற்பனை அதிகரித்துள்ளது. ஞாயிற்றுக்கிழமை நாமக்கல் உழவர் சந்தை மற்றும் தினசரி சந்தையில் மக்கள் கூட்டம் அலைமோதியது.

உழவர் சந்தைக்கு கத்தரி, தக்காளி, வெண்டை, புடலை, அவரைக்காய், பீன்ஸ், கீரைகள் என 41 வகையான 32 ஆயிரம் கிலோ காய்கறிகள் விற்பனைக்கு கொண்டு வரப்பட்டிருந்தன. ரூ.5 லட்சம் மதிப்பிலான அந்தக் காய்கறிகள் அனைத்தும் காலை 9 மணிக்குள் விற்று தீர்ந்ததாக உழவர் சந்தை அலுவலர்கள் தெரிவித்தனர்.

உழவர் சந்தையில் தக்காளி ஒரு கிலோ ரூ.7, புடலங்காய் ரூ.12, சுரைக்காய் ரூ.5, பீர்க்கங்காய் ரூ.16, கீரைகள் கட்டு ரூ.3 முதல் ரூ.5 வரை விற்பனை செய்யப்பட்டன. தேங்காய், வாழைப்பழம், வெங்காயம் ஆகியவற்றின் வரத்தும் அதிகமாக இருந்தது.

தினகரன்

இன்றைய வேளாண் செய்திகள்

24.09.2012 P.M

25.09.2012 A.M

25th Sep 20012

## நாமக்கல்லில் முட்டை விலை 10 காசு குறைந்தது



நாமக்கல் : நாமக்கல்லில் நேற்று தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழுவின் விலை நிர்ணயக் குழு கூட்டம் நடந்தது. புரட்டாசி துவங்கியதில் இருந்து தமிழகத்தில் முட்டை விற்பனை குறைந்துள்ளது. எனவே, விற்பனையை அதிகரிப்பதற்காக விலையை குறைக்க முடிவெடுக்கப்பட்டது. இதையடுத்து, 365 காசுகளாக இருந்த முட்டை விலையில் 10 காசுகள் குறைத்து ஒரு முட்டை விலை 355 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டது. கிலோ முட்டைகோழி விலை ரூ.45 ஆகவும், ஒருகிலோ கறிக்கோழி விலை ரூ. 63 ஆகவும் விலை நிர்ணயிக்கப்பட்டது.

25th Sep 20012

## மேட்டூர் அணைக்கு நீர் வரத்து 1762 கனஅடியாக குறைந்தது



மேட்டூர் : கர்நாடக அணையில் இருந்து தண்ணீர் வரத்து நின்றுவிட்டதால் மேட்டூர் அணையின் நீர்மட்டம் கடந்த இரு தினங்களில், 2 அடி வரை சரிந்துள்ளது. அணைக்கு நீர்வரத்து 1,762 கனஅடியாக குறைந்தது. கர்நாடக மாநிலம் காவிரி நீர்பிடிப்பு பகுதியில் பெய்த வடகிழக்கு பருவமழை காரணமாக, அங்குள்ள கபினி அணை நிரம்பி, உபரி நீர் வெளியேற்றப்பட்டு வந்தது. 4 நாட்களுக்கு முன்பு கபினி அணையிலிருந்து தண்ணீர் திறப்பது நிறுத்தப்பட்டது.

இதனால் மேட்டூர் அணைக்கு நீர்வரத்து வெகுவாக சரிந்துள்ளது. தமிழகத்தில் காவிரியின் உபநதிகளான பாலாறு, சின்னாறு, தொப்பையாறு ஆகிய பகுதிகளில் பெய்யும் லேசான மழையின் காரணமாகவே, இந்த தண்ணீர் மேட்டூர் அணைக்கு வந்து கொண்டிருக்கிறது. அணையில் இருந்து சம்பா சாகுபடிக்காக, தினமும் 1.25 டிஎம்சி தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. ஆனால், வரத்து 0.25 டிஎம்சிக்கும் குறைவாகவே உள்ளது. வரத்தைவிட திறப்பு பல மடங்கு அதிகமாக இருப்பதால், அணை யின் நீர்மட்டம் மளமளவென சரிந்து வருகிறது.

கடந்த 22ம் தேதி மேட்டூர் அணையின் நீர்மட்டம் 83.42 அடியாக இருந்தது. நேற்று மாலை 81.24 அடியாக சரிந்தது. கடந்த 2 நாளில் மேட்டூர் அணை நீர்மட்டம் 1.80 அடி வரை குறைந்துள்ளது. நீர் இருப்பு 43.20 டிஎம்சி. தண்ணீர் குறைவாக இருப்பதால் சம்பா சாகுபடி பாதிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

24th sep 2012 P.M

| 24th Sep 20012 | குறைந்து வரும் நிலத்தடி நீர்மட்டம் மீண்டும் வருமா மழைநீர் சேகரிப்பு திட்டம் |
| --- | --- |

காளையார்கோவில், : போதிய அளவு மழை இல்லாததால் நகர் பகுதிகளில் நிலத்தடி நீர்மட்டம் மிகவும் குறைந்து வருகிறது. எனவே மழைநீர் சேமிப்பு திட்டத்தை மீண்டும் செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் வேண்டும் என சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
கடந்த 8 ஆண்டுகளுக்கு முன் தமிழகம் முழுவதும் மழைநீர் சேமிப்பு திட்டம் அமல்படுத்தப்பட்டது. வீடுகள், நிறுவனங்கள் உள்ளிட்ட பகுதிகளில் மழைநீர் செல்லும் இடங்களில் சிறிய அளவிலான சிமென்ட் தொட்டிகள் கட்டப்பட்டு அவற்றில் சேகரிக்கப்படும் மழைநீர் எளிதில் பூமிக்கடியில் செல்லும் வகையில் சரளை கற்கள் உள்ளிட்ட பொருட்கள் போடப்பட வேண்டும் என உத்தரவிடப்பட்டது. மழைநீர் சேமிப்பு தொட்டிகள் இல்லாத வீடுகள், நிறுவனங்கள் மீது நடவடிக்கை எடுக்கவும் மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி மற்றும் ஊராட்சி உள்ளிட்ட நிர்வாகங்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. மேலும் அரசுக்கு சொந்தமான கட்டிடங்களிலும் மழைநீர் சேகரிப்பு திட்டம் அமைக்க உத்தரவிடப்பட்டு, நடைமுறைப்படுத்தப்பட்டது.
தற்போது இந்த திட்டம் செயல்பாடில்லாமல் உள்ளது. அரசுக்கு சொந்தமான கட்டிடங்கள், அலுவலகங்களில் மழைநீர் சேமிப்புக்காக கட்டப்பட்ட தொட்டிகள் அனைத்தும் தூர்ந்து விட்டன. பல அலுவலகங்களில் அவை குப்பைகள் கொட்டும் இடமாக உள்ளன. இந்த ஆண்டு எதிர்பார்த்த அளவு பருவமழை இல்லாத நிலையில், குறைந்த அளவு மழைநீரும் சேகரிக்கப்படாமல் வீணாகி வருகிறது. இதனால் பல்வேறு நகரங்களில் நிலத்தடி நீர் மிகவும் தாழ்வான பகுதிக்கு சென்று விட்டது. எனவே தமிழகம் முழுவதும் மீண்டும் மழைநீர் சேகரிப்பு திட்டத்தை கட்டாயமாக செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
காளையார்கோவிலை சேர்ந்த ஆசிரியர் ராதாகிருஷ்ணன் கூறுகையில், “மழைநீர் சேமிப்பின் அவசியம் குறித்து போதிய விழிப்புணர்வு இல்லாமையே இந்த நிலைக்கு காரணம். பல்வேறு நகரங்களில் நிலத்தடி நீர்மட்டம் நூற்றுக்கணக்கான அடிக்கும் கீழ் சென்றுவிட்டது. மழை நீரை சேமிப்பதன் மூலம் நிலத்தடி நீர் மட்டம் உயரும்.
குறைந்து வரும் நீர் ஆதாரங்களை பாதுகாக்க இத்திட்டத்தை கண்டிப்பாக மீண்டும் செயல்படுத்த வேண்டும். எதிர்கால நீர் தேவை குறித்த சரியான திட்டமிடல் அவசியம் வேண்டும். எனவே மழைநீர் சேமிப்பு திட்டத்தை பெயரளவில் இல்லாமல் நிரந்தரமாக செயல்படுத்துவது குறித்து ஆலோசித்து அரசு விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும்“ என்றார்.

## 24th Sep 20012

## விவசாயிகள் சங்க கூட்டம்

சிவகங்கை, : தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் மற்றும் விவசாய தொழிலாளர் சங்க மாவட்ட நிர்வாகிகள் கூட்டம் சிவகங்கையில் நடந்தது. விவசாய தொழிலாளர் சங்க மாவட்டத் தலைவர் பொன்னுச்சாமி தலைமை வகித்தார். விவசாய சங்க மாவட்டத் தலைவர் ஆதிமூலம், செயலாளர் மாணிக்கம், பொருளாளர் ஜெயராமன், விவசாயிகள் தொழிலாளர் சங்க மாவட்டச் செயலாளர் தண்டியப்பன், துணைச் செயலாளர் வீரபாண்டி கலந்து கொண்டனர்.

புறம்போக்கில் 5 வருடங்களுக்கு மேலாக குடியிருந்து வருபவர்களுக்கு வீட்டுமனை பட்டா கொடுக்க வேண்டும். குடிமனை பட்டா இல்லாதவர்களுக்கு வீட்டுமனை பட்டா வழங்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி சிவகங்கை, இளையான்குடி, திருப்புத்தூர், காரைக்குடி, தேவகோட்டை ஆகிய 6 தாலுகா அலுவலகங்களில் வருகிற 26ம் தேதி காத்திருக்கும் போராட்டம் நடத்துவது என முடிவு செய்யப்பட்டது.

## 24th Sep 20012

## உழவர்மன்ற துவக்க விழா

குஜிலியம்பாறை, : பூஜா பெண்கள் மேம்பாட்டு அறக்கட்டளை மற்றும் நபார்டு வங்கி இணைந்து குஜிலியம்பாறை அருகே ஆர்.வெள்ளோட்டில் விவசாயிகளுக்கு உழவர் மன்ற துவக்க விழா மற்றும் தலை மை பண்பு மேலாண்மை பயிற்சி முகாம் நடந்தது.

விழாவிற்கு குஜிலியம் பாறை ஊராட்சி ஒன்றிய துணைத் தலைவர் நல்ல சாமி தலைமை வகித்தார். பூஜா பெண்கள் மேம்பாட்டு அறக்கட்டளை நிர்வாக மகேஸ்வரி வரவேற்றார். நபார்டு வங்கி உதவி பொது மேலாளர் சஞ்சீவி முன்னி லை வகித்தார்.

விழாவில் விவசாயிகள் மற்றும் வங்கிகள் நல்லுறவை மேம்படுத்தும் நோக்கி லும், அரசின் திட்டங்கள் வங்கி கள் மூலம் விவசாயிகள் பய ன்பெறவும் உழவர் மன்றம் தொடங்கப்பட்டது என விளக்கப்பட்டது.

சூலப்புரம் பேங்க் ஆப் இந்தியா கிளை மேலாளர் பாலசுப்பிரமணி வங்கி நடவடிக்கைகள் குறித்தும், உதவி இயக்குநர் சுந்தரமூர்த்தி, வேளாண்மை உதவி இயக்குநர் ரவிபாரதி ஆகியோர் விவசாயம் சார்ந்த தொழில்நுட்பம் குறித்தும், கால்நடை உதவி மருத்துவர் சிவசாமி கால்நடை வளர்ப்பு குறித் தும் பேசினார்.

உழவர் மன்ற தலைவர் வரதராஜன், செயலாளர் ரெகுநாதன், பொருளாளர் பாலுச்சாமி ஆகியோர் ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

| 24th Sep 20012 | சங்கராபுரம் பகுதியில் செங்காந்தள் மலர் பயிரிடும் விவசாயிகள் |
|---|---|

சங்கராபுரம், : விழுப்புரம் மாவட்டம் சங்கராபுரம் பகுதியின் பல்வேறு இடங்களில் தற்போது செங்காந்தள் பூ அதிகளவில் பூத்து குலுங்குகிறது. மருத்துவ குணம்கொண்ட இந்த பூ இருதய நோய், மூட்டு வலி போன்ற நோய்களுக்கு முக்கிய மருந்தாக பயன்படுகிறது. தமிழ்நாட்டின் தேசிய மலராக கூறப்படும் இந்த பூ ஆண்டிற்கு ஒரு முறை மட்டுமே பூக்கும். மருத்துவ குணம் கொண்டதால் இதை விவசாயிகள் அதிகளவில் பயிரிட்டு விற்பனை செய்கின்றனர்.

ஒரு ஏக்கருக்கு 80 முதல் 100 கிலோ வரை விதை கிடைக்கும். ஒரு கிலோ விலை ஆயிரம் முதல் 1,500 வரை விற்கப்படுகிறது. இந்த பூவிற்கு காட்டு தீ, கண்ணுவலிபூ, செங்காந்தள் மலர் என மூன்று பெயர்கள் உண்டு. ஆண்டுதோறும் ஆடி மாதம் முதல் தை மாதம் வரை பூக்கக்கூடியதாகும். இந்த பூ தமிழ்நாட்டின் பல்வேறு இடங்களில், தானாகவும், விவசாயிகள் பயிரிட்டும் வளர்த்து வருகின்றனர். தற்போது சங்கராபுரம் பகுதியில் உள்ள காடுகளில் அதிக அளவு செங்காந்தள் பூ பூக்க தொடங்கியுள்ளது.

| 24th Sep 20012 | வேளாண்மை துறை அதிகாரி தகவல் அதிக மகசூல் எடுக்கும் விவசாயிகளுக்கு பரிசு |
|---|---|

திருக்கோவிலூ: திருக்கோவிலூர் வட்டம் முகையூர் ஒன்றியத்தில் சென்னகுணம் கிராமத்தில் மாநில அளவிலான கம்பு பயிர் மகசூல் போட்டி, சோதனை அறுவடை கார்த்திகேயன் என்ற விவசாயி நிலத்தில் நடைபெற்றது. நடுவர்களாக திருவண்ணா மலை மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் சக்கரவர்த்தி, விழுப்புரம் மாவட்ட துணை வேளாண்மை இயக்குனர் ராஜசேகர், வேளாண்மை அலுவலர் சரவணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இதில் 5 சென்ட் பரப்பில் அறுவடை செய்யப்பட்டு அப்பகுதி விவசாயிகள் முன்பு தானியம் எடையிடப்பட்டு மகசூல் கணக்கிடப்பட்டது, பயிர் மகசூல் போட்டியில் சென்னகுணம் பகுதியை சேர்ந்த முன்னோடி விவசாயிகள், மகளிர் சுயஉதவிக்குழுவினர்கள் பங்கேற்றனர்.

வேளாண்மை உதவி இயக்குனர் கென்னடி ஜெயக்குமார் விவசாயிகளிடம் கூறும்போது, தமிழக அரசு விவசாய உற்பத்தியை அதிகரித்திடும் நோக்கில் அனைத்து பயிர்களிலும் மாவட்ட அளவில் மற்றும் மாநில அளவில் அதிக மகசூல் எடுக்கும் விவசாயிகளுக்கு பரிசுதொகை வழங்குகிறது. பிற விவசாயிகள் பயிர் மகசூலில் போட்டியிடும் விவசாயிகள் நிலத்தினை பார்வையிட்டு அந்த

விவசாயிகளிடம் கலந்துரையாடி தங்கள் நிலத்தில் அதிக மகசூல் எடுத்து உற்பத்தியை அதிகரிக்க வேண்டும்.
பயிர் மகசூல் போட்டி யில் கலந்து கொள்ளும் விவசாயிகள் அந்தந்த பகுதி உதவி வேளாண்மை அலுவலர்களை தொடர்பு கொண்டு உரிய படிவத்தில் பூர்த்தி செய்து விண்ணப்பங்களை பதிவு செய்து கொள்ளலாம் என்றார். அப்போது நீர்பாசன சங்க தலைவர் பழனிவேல், ஊராட்சி தலைவர் மயிலிகலியன், துணை வேளாண்மை அலுவலர் புகழேந்தி, உதவி வேளாண்மை அலுவலர்கள் திருமலை, வெங்கடகிருஷ்ணன், சிவநேசன், செந்தில்குமார், வெங்கடேசபெருமாள், சிவக்குமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

24th Sep 20012

## நவீன இயந்திரம் மூலம் நாற்றுநடும் பணி துவக்கம்

உளுந்தூர்பேட்டை, : உளுந்தூர்பேட்டை அருகே மூலசமுத்திரம் கிராமத்தில் வேளாண்மை துறையின் சார்பில் திருந்திய நெல்சாகுபடி முறையில் இயந்திரத்தின் மூலம் நாற்றுநடும் பணி நடைபெற்றது. வேளாண்மை உதவி இயக்குனர் கருணாநிதி தலைமை தாங்கி நாற்றும் நடும் பணியை துவக்கி வைத்தார். பின்னர் அவர் பேசியபோது, இயந்திரத்தின் மூலம் நாற்று நடும் போது ஒரு ஏக்கருக்கு 2 கிலோ விதை அளவே போதுமானது. நாற்றுநட்டு 16 நாட்களில் நடவு செய்யப்படுகிறது. இந்த முறையின் மூலம் குறைந்த அளவு நெல்விதைகளே பயன்படுத்தப்படுகிறது. நாற்றாங்கால் பரப்பும் மிகக்குறைவானது. அதிகப்படியான வேர் வளர்ச்சி அடைவதுடன் குறைந்த அளவே நீர் தேவைப்படுகிறது. அதிக அளவு தூர்கட்டுதல், திரட்சியான கதிர்கள், ஆட்கள் குறைவு, குறைந்த மின்சக்தி வினியோகம் உபயோகப்படுகிறது. அதிகப்படியான லாபம் மற்றும் அதிக மகசூல் கிடைப்பதால் திருந்திய நெல்சாகுபடி முறையில் இயந்திரத்தின் மூலம் நாற்றுநடும் பணிகள் உளுந்தூர்பேட்டை வட்டாரத்தில் முழுவீச்சில் நடைபெற்று வருகிறது. இந்த முறையினை பயன்படுத்துவது தொடர்பாக விவசாயிகளுக்கு சந்தேகங்கள் இருந்தால் உளுந்தூர்பேட்டை வேளாண்மை விரிவாக்க அலுவலகத்தை தொடர்பு கொண்டு தெரிந்துகொள்ளலாம் என்றார்.

24th Sep 20012

## யானைகளால் பாதிக்கப்பட்ட 24 விவசாயிகளுக்கு ரூ.1.94 லட்சம் உதவி எம்எல்ஏ வழங்கினார்

திருப்பத்தூர், :திருப்பத்தூர், ஆலங்காயம் வன சரகத்திற்குட்பட்ட காவலூர், ஆண்டியப்பனூர், குரும்பேரி, மாம்பாக்கம் ஆகிய பகுதிகளில் கடந்த சில நாட்களுக்கு முன் காட்டு யானைகள் விவசாய நிலத்தில் இருந்த நெல், கரும்பு, வாழை போன்ற பயிர்களையும் தென்னை மரங்களையும் சேதப்படுத்தியது.

இதனால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரண உதவித்தொகை வழங்கும் நிகழ்ச்சி திருப்பத்தூர் வனச்சரக அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடந்தது. இதில் 24 விவசாயிகளுக்கு ரூ.1.94 லட்சத்திற்கான உதவித்தொகையை எம்எல்ஏ கே.ஜி.ரமேஷ் வழங்கினார்.

நிகழ்ச்சியில் உதவி வனப்பாதுகாவலர் மகேந்திரன், வனச்சரக அலுவலர்கள் மனசேமணவாளன் (திருப்பத்தூர்), முனியப்பன்(ஆலங்காயம்), வனவர்கள் உதயகுமார், துரைமுருகன், பரமசிவம், முருகேசன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இன்றைய வேளாண் செய்திகள்

25.09.2012 A.M

25th Sep 20012

புயலில் பாதிக்க பட்ட
முந்திரி, பலா விவசாயிகளுக்கு ரூ.1 1/2 கோடி நிவாரண தொகை வழங்க பட்டுள்ளது
கூடுதல் கலெக்டர் வீரராகவராவ் தகவல்

தானே புயலால் பாதிக்க பட்ட முந்திரி, பலா மற்றும் மா விவசாயிகளுக்கு நிவாரண தொகையாக இதுவரையில் ரூ.1 1/2 கோடி வழங்க பட்டுள்ளது என்று கூடுதல் கலெக்டர் வீரராகவராவ் தெரிவித்துள்ளார்.

புயல் பாதி பு விவசாயிகள்

கடலூர் மாவட்ட தானே புயல் கூடுதல் கலெக்டர் வீரராகவராவ் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில் அவர் கூறியிரு பதாவது:–
கடலூர் மாவட்டத்தில் கடந்த 8 மாதங்களுக்கு முன்பு அடித்த தானே புயலினால் வேளா மை மற்றும் தோட்டக்கலை பயிர்கள் பெருத்த சேதமடைந்தன. அதனை தொடர்ந்து பாதிக்க பட்ட 2 லட்சத்து 5 ஆயிரத்து 475 விவசாயிகளுக்கு ரூ.11 லட்சத்து 87 ஆயிரத்து 521 உடனடி நிவாரண தொகையாக வழங்க பட்டது. இதனையடுத்து முதல்–அமைச்சர் ஜெயலலிதா அறிவித்த தானே புயல் சிற பு மறுவாழ்வு தொகு பு திட்டத்தின் மூலம் கடலூர் மாவட்டத்தில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்த பட்டு வருகின்றன. அதன் படி விவசாயிகளுக்கு விலையில்லா நெல், உளுந்து, எ ணைவித்துகள், பச்சைபயறு, சிறுதானியம் மற்றும் காய்கறி விதைகள் வழங்க பட்டன.

நிவாரண தொகை

மேலும் புயலால் பாதிக்க பட்ட முந்திரி, பலா, மா போன்ற மரங்களை வெட்டி அகற்றி விவசாயிகள் உழவு பணி மேற்கொள்ள அவர்களுக்கு 1 எக்டருக்கு ரூ.25 ஆயிரம் வீதம் உதவி தொகையாக இதுவரையில் 601 பேருக்கு ரூ.1 கோடியே 46 லட்சத்து 42 ஆயிரத்து 880 வழங்க பட்டுள்ளது. மேலும் தோட்டக்கலை துறை மூலம் பகுதி வெட்டி அகற்றிய பர பிற்கு அகற்றிய பர பளவின் அடி படையில் எக்டருக்கு ரூ.25 ஆயிரம் வீதம் 3050 விவசாயிகளுக்கு உதவி தொகை வழங்க பட உள்ளது. முந்திரியில் உயர் தொழில்நுட்பத்துடன் கூடிய வி.ஆர்.ஐ.–3 அடர் நடவு முறையை பரவலாக்க செய் ம் நோக்கத்தில் ப ருட்டி அருகே மேலிரு பு கிராமத்தில் 20 ஏக்கரில் 8 விவசாயிகளை கொ டு மாதிரி உயர் தொழில்நுட்ப முந்திரி சாகுபடி திடல் அமைக்க பட்டுள்ளது. இதனை அனைத்து விவசாயிகளும் பார்வையிட்டு தொழில்நுட்பங்களை அறிந்து பயன்பெற வே டும்.

இவ்வாறு அந்த அறிக்கையில் அவர் தெரிவித்துள்ளார்.